## 1.1 அபிப்பிராயம்

பீஓசீ மனேஜ்மென்ட் அன்ட் சப்போர்ட் சேவிஸஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**விடயத்தினுடைய வலியுறுத்தல்**

முனைப்பழியுள்ள எனது அபிப்பிராயம் இல்லாமல், கம்பனியை முடிவுறுத்துவதற்கு பணிப்பாளர் சபையினுடைய அனுமதியானது வழங்கப்பட்டிருந்தமையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களிற்கான விளக்கக்குறிப்பு இல.2.1.3 இற்கு தங்களுடைய கவனத்தினை நான் கொண்டுவருகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்;

- பொருத்தமான எழுத்திலான சட்டம், அல்லது கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் கம்பனி இணங்கியொழுகியதா;

- கம்பனி அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்கின்றதா; மற்றும்

- கம்பனியின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருந்ததா.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிறுவனத்தினுடைய தொடர்ந்து செல்லல்

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களிற்கான விளக்கக் குறிப்பு இல. 2.1.3 இற்கமைய, கம்பனியினுடைய பணிப்பாளர் சபை 2017 ஆகஸ்ட் 01 இல் நடைபெற்ற அதனது கூட்டத்தில் கம்பனியினை அண்மையில் முடிவுறுத்த வேண்டும் என தீர்மானித்திருந்தது.<br><br>2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 320(1) ஆம் பிரிவிற்கமைய, கம்பனியானது | கருத்துரை வழங்கப்படவில்லை. | 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 320(1) ஆம் பிரிவிற்கு இணங்கிச் செயற்பட வேண்டும். |

தன்னிச்சையாக முடிவுறுத்தும் தீர்மானத்தினை நிறைவேற்றும்பொழுது, குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் வர்த்தமானி வெளியீட்டின் மூலம் குறித்த தீர்மானத்தினுடைய அறிவித்தலானது கொடுக்கப்பட வேண்டும்.

எனினும், கம்பனி வர்த்தமானியில் வெளியிடுவதன் மூலம் தீமானத்தினுடைய அறிவித்தலினை கொடுத்திருக்கவில்லை.

### 1.5.2 ஆவண சான்றுகள் கணக்காய்விற்காக கிடைக்கப்பெறவில்லை

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| தொடர்புடைய கட்சியினரிடமிருந்து பெற வேண்டிய மீதிகள், பெறவேண்டிய ஊக்குவிப்புக்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 423,542 பெறுமதியான ஏனைய கொடுப்பனவுகள் ஆகியன சான்றுகள் கிடைக்கப்பெறாமையால் கணக்காய்வில் சரிபார்க்கப்பட முடியவில்லை. | கம்பனி அதன் முடிவுறுத்தும் செயற்பாட்டின் இறுதிக்கட்டத்தில் குறித்த பொறுப்புக்களையும் பெற வேணடியவைகளையும் தீர்ப்பனவு செய்து ஈடுசெய்யும். | கிடைக்கக்கூடிய ஆவணச்சான்றுகள் பேணப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்தவேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 31 திசெம்பர் 2018 இல் வரிப்பொறுப்பு எதுவும் இல்லை. எனினும், நிதி நிலமையினுடைய கூற்றின்படி, வரிப்பொறுப்பானது ரூபா 193,032 ஆக இருந்தது. இதனால் செலுத்தப்படவேண்டிய வரியானது நிதிக்கூற்றுக்களில் ரூபா 193,032 வினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | கம்பனி முடிவுறுத்தும் செயற்பாட்டில் உள்ளதுடன் வரி அனுமதி மற்றும் வரி பொறுப்பு என்பனவற்றை பெறுவதற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் தொடர்புகொண்டுள்ளதுடன் இதற்கமைய கணக்குகள் சீர்செய்யப்படும். | உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் வரி உறுதிப்படுத்தல் பெறப்பட வேண்டும் என்பதுடன் கணக்குகளில் மீதிகள் சரிசெய்யப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வு செய்யப்படும் ஆண்டிற்கான கம்பனியினது தொழிற்பாடுகளின் விளைவானது ரூபா 17,048 ஆன நட்டத்தினை காட்டுவதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான இலாபமானது ரூபா 644,256 ஆகவும் உள்ளது. எனவே, நிதி விளைவுகளில் ரூபா 627,208 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கம்பனி கலைப்பு செயல்முறைகளில் இருக்கின்றமையாலும் கடந்த வருட காலப்பகுதியில் கம்பனியினுடைய பிரதான வருமான மூலமாக இருந்த முதலீடுகளினை திரும்ப பெற்றுக்கொண்டமையும் இந்த வீழ்ச்சிக்கான காரணமாக இருந்தது. இதனால் எந்தவித வட்டி வருமானமும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெறப்பட்டிருக்கவில்லை.

கம்பனி மீளாய்வாண்டு காலப்பகுதியில் தொழிற்பாட்டு வருமானம் எதனையும் ஈட்டியிருக்கவில்லை. பங்கிலாப வருமானம் ரூபா 2 மட்டுமே வருமானமாக இருந்ததுடன் செலவீனங்களாக ரூபா 17,050 தொகையான நிர்வாக மற்றும் தாபனச் செலவுகள் காணப்பட்டன. அனைத்து வரி மற்றும் செலவுகளிற்கு பின்னர் கம்பனி தேறிய நட்டமாக ரூபா 17,048 இனை குறித்த காலப்பகுதியில் உழைத்திருந்தது.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| இலங்கை வங்கியின் மனிதவள தேவைப்பாடுகளை எளிதாக்குவதன் பொருட்டு ஊழியர்களின் ஆட்சேர்ப்பு கம்பனியின் பிரதான வியாபார நடவடிக்கையாக காணப்படுகின்றது. எனினும் கம்பனியானது 2007 ஆம் ஆண்டிலிருந்து இந்த பிரதான செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கவில்லை. பணிப்பாளர் சபையானது 2017 ஆகஸ்ட் 01 இல் நடாத்தப்பட்ட அதனது கூட்டத்தில் கம்பனியை முடிவுறுத்துவதற்கு தீர்மானித்திருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கம்பனி வியாபார நடவடிக்கைகளை அதனது பிரதான வணிக நடவடிக்கைகளுக்கு இணங்க முன்னெடுக்க வேண்டும். |